சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்
MCOP No. 215/2022

பெயர். திரு. விவேக் த/பெ. நாள்.19.06.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1) விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. நான் சிகிச்சை பெற்றதற்கான நோட்டுப் புத்தகம் ம.த.சா.ஆ.2. எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் எனக்கு வழங்கிய வெளியேற்றுக் குறிப்புரைகள் ம.த.சா.ஆ.3 முதல் 5. எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான வழங்கிய மருத்துவ குறிப்புகள் அடங்கிய கோப்புகள் ம.த.சா.ஆ.6. எனக்கு ஏற்பட்ட மருத்துவ செலவீனங்களுக்கான ரசீதுகள் ம.த.சா.ஆ.7. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.8 மற்றும் 9. எனக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிக்கான உதவிப் புத்தகம் மற்றும் அடையாள அட்டை நகல் ம.த.சா.ஆ.10. என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.11. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் ம.த.சா.ஆ.12 முதல் 14. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

2) என் மீது எந்த் வாகனம் மோதியது என்றால் கார். அந்த காருக்கு முறையான காப்பீடு மற்றும் அதன் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிழக்கு கடற்கரை சாலையில் புதுவை மார்க்கத்தில் இருந்து சென்னை மார்க்கமாக சென்றேன். தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தேன். நான் சாலையின் வலது புறம் சென்று கொண்டிருந்தேன் என்றால் இடது புறம்தான் சென்று கொண்டிருந்தேன். கார் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. நான் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்லும் சாலையில் வலது புறமாக தவறான பாதையில் சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) எனக்கு தலையின் பின்புறம் அடிப்பட்டது. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணியவில்லை. நான் தவறான எதிர் திசையில் செல்லும்போது காரின் வலது புறம் சென்று நான் மோதிக் கொண்டேன் என்றால் சரியல்ல. அடிப்பட்டவுடன் காவல் நிலையத்திற்கு தகவல் அளித்து ஒரு பெண் காவலர் அடிப்பட்ட இடத்திற்கு வந்தார் என்றால் நான் அடிப்பட்டவுடன் சுய நினைவு இழந்துவிட்டேன். விபத்து முழுக்க முழுக்க என் அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என்றாலும், 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் ஏற்பட்டது என்றால் சரியலல. நான் கேட்டுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரைடிரப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத் தக்கது என்றால் சரியல்ல.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் எதிர்மனுதாரர் வாகனம் சாலை விதிகளை கடைப்பிடத்து பொறுமையாவும், நிதானமடாகவும் ஓட்டிவரப்பட்டது என்றாலும், நான்தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருச்ககர வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தைத் தவிர என்னுடைய தொழிலை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நானே ஏற்படுத்திக் கொண்டேன் என்றாலும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு அதிகம் பெறுவதற்காக நான் காயங்களை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.